1974 மார்ச் 20]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அப்படிப்பட்ட திட்டம் ஏதும் தற்சமயம் ஆய்வில் இல்லை.

திரு. த. சோலையா: தலைவரவர்களே, மதுரை மீனாட்சி அம்மன் கோவிலைச் சுற்றி அடைப்பின்றித் திறந்த வெளியாக இருப்பதால், ஆடு, மாடுகளும், மற்றவர்களும் அந்த இடங்களை அசுத்தம் செய்கிறார்கள். எனவே, அந்தக் கோவிலைச் சுற்றிக் கடைகளைக் கட்டி விட்டால், வருமானமும் வரும், இடமும் சிறப்பாக இருக்கும். ஆகவே, அந்தச் சுற்று வட்டாரத்தில் கடைகள் கட்டு வதற்கு அரசு யோசிக்குமா? ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, கோவிலை நல்ல முறையில் பாதுகாக்க வேண்டுமென்ற வகையில், உள்ளே இருக்கிற கடைகளை வெளியே இருக்கின்ற சுற்றுப்பிரகாரத்தில் கடைகள் கட்டி விடவேண்டுமென்று சென்ற ஆண்டில் யோசனை செய்யப்பட்டது. ஆனால் அந்தப் பகுதியில் இருக்கின்ற மதுரை மாவட்டத்து மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் கடைகள் கட்டு கின்ற திட்டத்தைக் கைவிடவேண்டிவந்தது. இப்போது அந்த இடம் தூய்மையாக ஆக்கப்பட்டு, நல்ல பூங்கா ஏற்படுத்துவதற் காக அந்தக் கோவில் சார்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

New Jersey Farm

*530 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether New Zealand has offered any assistance to the Tamil Nadu Dairy Development Corporation to set up a Jersey Farm at Kodaikanal; and

(b) if so, the details thereof?

Thiru B. VENKATASWAMY: Sir, I undestand that a Jersy Farm is to be opened with foreign aid from New Zealand or some other foreign country. May I know from the Hon. Minister whether such a Farm will be started and where it will be started and what is the amount that is given by the foreign nation?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, கொடைக்கானலிலே ஜெர்ஸி பண்ணை நிறுவுவதற்காக நியுஜிலாந்து அரசாங்கம் இன்னும் எந்தவிதமான உதவியையும் செய்யவில்லை. ஆனால் இந்திய-நியுஜிலாந்து ஒப்பந்தத்தின்படி அந்தப் பண்ணையை நிறுவுவதற்காக ஆய்வுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. நியுஜிலாந்து வல்லுநர்கள் குழு ஒன்று வந்து சமீபத்தில் கொடைக்கானலில் இடத்தைப் பார்வையிட்டுச் சென்று இருக்கிறார்கள். இன்னும் அந்தத் திட்டம் பூர்த்தி செய்யப்படவில்லை. அதுபோல் தருமபுரி மாவட்டத்திலும் ஓசூரில் இங்கிலாந்து நாட்டின் உதவியோடு ஒரு பண்ணையை நிறுவுவதற்கு இருக்கிறோம். அந்தத் திட்டம் அரசாங்கத்தின் ஆய்வில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அது உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

கோவில்பட்டி வட்டாரத்தில் வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின்சாரம் ஒழுங்காக வினியோகிக்காததும் அதன் விளைவுகளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சோ. அழகர்சாமி அவர்கள், "திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி வட்டாரத்தில் கடந்த ஒரு வார காலமாக பம்ப் செட்டுகளுக்கு பிற்பகல் மட்டும் விடப்படும் மின்சாரம்கூட இடையிடையே பல தடவைகள் நிறுத்தப்பட்டு மின் சப்ளை விடுவதால் கிணற்றுப் பாசனத்திற்குத் தண்ணீர் பாய்ச்ச முடியாமல் போய் ஆயிரக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள நெல், பருத்தி, சோளம், மிளகாய், வாழை போன்ற பயிர்கள் தீய்ந்து, கிணற்றுப் பாசன விவசாயிகள் மிகப் பெரும் பாதிப்புக்குள்ளாகி இருக்கும் நிலையைப் போக்கி, சீரான மின்சார வினியோகத்திற்கு அரசு எடுக்க வேண்டிய அவசர நடவடிக்கைபற்றி விவாதிக்க" என்று ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எந்த வகையில்